**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

**C031 தமிழகப் பண்பாட்டு வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பன்முகப் பண்பாடு என்றால் என்ன?
2. சிந்து வெளி நாகரிகத்தைத் திராவிட நாகரிகம் என்று கூறிய தொல்லியல் அறிஞர் யாவர்?
3. தமிழினத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் நிறுவ துணை நிற்கும் சான்றுகள் யாவை?
4. இந்த உலகம் தொடர்ந்து இயங்குவதற்குக் காரணமாக கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி கூறுவது என்ன?
5. காயசண்டிகை யார்?
6. தமிழர் பண்பாட்டில் பேரிடம் பெறும் நம்பிக்கைகளைக் குறிப்பிடுக.
7. மருந்து நூலகள் எனப்படுபவை யாவை?
8. பௌத்தத்தின் கடவுள் கொள்கை என்ன?
9. திரு.வி.க. நடத்திய இதழ்கள் யாவை?
10. மொழி வழி மாநிலப் பிரிவினையின்பொழுது தமிழகம் இழந்த பகுதிகள் யாவை?

11. தமிழும் தமிழ்ப் பண்பாடும் அயல்நாடுகளில் பரவாதது ஏன்?
12. தமிழகத்தின் சமணத் தலைமைப்பீடமாக விளங்கிய இடம் எது?
13. வீரமாசத்தி என்றால் என்ன?
14. தலைக்கோல் என்றால் என்ன?
15. கற்றளிப் பிச்சன் என்றால் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தஞ்சை பெரியகோயில் – குறிப்பு வரைக.
2. தமிழரின் விருந்தோம்பல் பண்பு குறித்து இயம்புக.
3. குண்டலகேசியின் கதையைச் சுருக்கமாகக் கூறுக.
4. தமிழிசை வடமொழி மயமாக்கப்பட்டது குறித்து எழுதுக.
5. வ.உ.சிதம்பரனாரின் சிறை வாழ்க்கையைக் கூறுக.
6. தமிழின் பெருமைகளை விளம்புக.
7. தமிழகத்தில் கிடைத்த நாணயங்கள் குறித்து எழுதுக.
8. தமிழகக் கல்வெட்டுகளின் மொழி குறித்துக் கூறுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழரின் உறைவிடம் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

   (அல்லது)

   (ஆ) தமிழரின் காதல் பண்பாடு குறித்து விளக்கியுரைக்க.

2. (அ) தமிழ்ப் பண்பாட்டில் அறநூல்களின் தாக்கம் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

   (அல்லது)

   (ஆ) கிறித்துவர்கள் தமிழுக்கு ஆற்றிய பணிகளை விளக்கியுரைக்க.

3. (அ) தமிழகத்தின் தற்காலப் பண்பாட்டுச் சூழல் குறித்து விவரித்துரைக்க.

   (அல்லது)

   (ஆ) கோயில்கள் வாயிலாக நடந்த சமய சமுதாயப் பணிகளை எடுத்துரைக்க.

***